**Date: 05.03.2020**

**DVA 397/2019**

ம.சா. 1 ஜெயந்தி

சாட்சி ஆஜர், சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை</u>

எனக்கும் எதிர்மனுதாரருக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் 1995 ல் நடந்தது. தேதி மாதம் நினைவிலில்லை. என் பெற்றோர்கள் என்ன் வேலைக்கு செல்கிறார்கள் என்றால் என் தந்தை இஎஸ்ஐயில் வாட்ச்மேனாக இருந்தார். என் தாயார் கட்டிட வேலைக்கு சென்று வந்தார் . என் தந்தை தற்காலிகப் பணியாளர் என்றால் சரியல்ல. நிரந்தரமான பின் அவர் பணி ஓய்வு பெற்றார். என் மாமனார் மாமியார் என்ன வேலை செய்கிறார்கள் என்றால் மாமனால் சி.எம்.சி ஹாஸ்டலில் வேலை பார்த்து வந்தார். மாமியார் கட்டிட வேலைக்கு சென்று வந்தார். காதல் திருமணம் என்பதால் என்னையும் எதிர்மனுதாரரையும் இரு குடும்பத்தாரும் சேர்ந்து கொள்ள்வில்லை என்றால் சரியல்ல. சேர்த்துக்கொண்டார்கள். என் மனுவில் இரு குடும்பத்தாரும் எங்களை சேர்த்துக் கொள்ளவில்லை என்று நான் கூறியிருந்தால் அது தவறு தான் என்றால் ஆமாம். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 பையன்கள். இரண்டு குழந்தைகளின் வயது என்ன என்றால் மூத்த மகனுக்கு 23 வயதும், சிறிய மகனுக்கு 22 வயதும் ஆகிறது. 2 மகன்களுக்கும் திருமணம் ஆகி விட்டதா என்றால் இல்லை. நான் என் மனுவில் எதிர்மனுதாரர் என்னை காயப்படுத்தி கொடுமைப்படுத்தியதாகக் கூறியுள்ள சங்கதிகளின் தேதி வருடம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் புகார் மனுவில் எதிர்மனுதாரர் என்னை அடித்து காலை உடைத்த போது அதன் மருத்துவ செலவினங்களை என் தந்தை தான் பார்த்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் எதுவும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். தாக்கல் செய்யவில்லை. எந்த எதிர்மனுதாரர் என்னை அடித்து காயப்படுத்தினார் என்ற விபரத்தையும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னை மேற்குறிப்பிட்ட படி எதுவும் செய்யாததால் தான் என்னால் தேதி வருடம் குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை என்றாலும், காயம் எதுவும் ஏற்படிவில்லை என்றாலும், சிகிச்சையும் பெறவில்லை என்றாலும், அவ்வாறு ஏற்பட்டிருந்தால் ஆவணங்களை சமர்ப்பித்திருப்பேன் என்றால் சரியல்ல. வீட்டில் தகராறு ஏற்பட்டு எதிர்மனுதாரர் என்னை அடித்தது உண்மை. அதனால் எனக்கு இடது கையில் கண்ணாடியால் கிழித்த தழும்பு கூட இருக்கிறது. ( சாட்சி அந்த தழ்மை காட்டுகிறார். )என் புகார் மனுவில் எதிர்மனுதாரர் என் காலை உடைத்ததாகத்தான்

சொல்லியுள்ளேன் என்றாலும், கண்ணாடியால் கையைக் கிழித்ததாக சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை பலமுறை அடித்து காயப்படுத்தி உள்ளார். அனைத்தையும் என்னால் தேதி நினைவில் வைத்து சொல்லமுடியவில்லை. என் மூத்த மகனுக்கு நரம்பு தளர்ச்சி மற்றும் காக்கா வலிப்பு நோயும் இருப்பதாகக் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். 8 வயதிலிருந்து இருக்கிறது. மருத்துவமனையில் நான் தான் அதற்கான சிகிச்சை அளித்ததாகக் கூறியுள்ளேன் எனறால் ஆமாம். அந்த சிகிச்சைக்கான ஆவணம் எதுவும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். ஏனென்றால் அனைத்து ஆவணங்களுமே எதிர்மனுதாரர் வீட்டில் தான் உள்ளது. நான் வரும் போது எதுவும் எடுத்து வரவில்லை. எதிர்மனுதாரர் பொறுப்பான தந்தையாக நடந்து மூத்த மகனுக்குண்டான அனைத்து மருத்துவ செலவுகளையும் இன்று வரையிலும் செய்து வருகிறார் என்றாலும், அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் என் மகன் சிகிச்சையில் இருந்த போது அவ்வப்போது பார்த்து செல்வார். நான் தான் முழு நேரமும் என் மகனுடன் மருத்துவமனையில் இருந்து பார்த்துக் கொண்டேன். எதிர்மனுதாரருக்கு பல பெண்களுடன் தொடர்பு இருப்பதாகக் கூறியுள்ள சங்கதிகளுக்கு சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சியம் இருந்தது. அனைத்தையும் எதிர்மனுதாரர் பிடுங்கி தீயில் போட்டு எரித்து விட்டார். தீயில் போட்டு எரித்து விட்டது சம்மந்தமாக மனுவில் நான் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். சாட்சியத்தை அழித்து விட்டதால் தான் நான் கூறவில்லை. மேற்படி சம்பவம் எதுவும் நடக்காததால் தான் நான் அந்த சம்பவத்தை என் புகார் மனுவில் சொல்லியிருப்பேன் என்றாலும், அவ்வாறு நடக்காததால் தான் நான் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் என் புகார் மனுவில் சொல்லியுள்ள படி எதிர்மனுதாரர் என்னை எந்த காலத்திலும் கொடுமைப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் இன்றைய தேதி வரையிலும் பொறுப்பான கணவராகவும், தந்தையாகவும் இருந்துஅனைத்து கடமைகளையும் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அவர் அவ்வாறு எதுவும் செய்வதில்லை. எதிர்மனுதாரர் எனக்கு நீதிமன்றத்தில் சசொன்னபடி ஜீவனாம்சம் கொடுத்தார் என்றால் 3 மாதங்கள் ம்ட்டு மே கொடுத்தார். அதன் பின் கொடுக்கவில்லை. தற்போதும் எதிர்மனுதாரர் என் மகன்களுக்குரிய மருத்துவ செலவினங்கள் மற்றும் தேவையான மற்ற செலவினங்களையும் செய்து வருகிறார் என்றால் சரியல்ல . நான் என் புகாரில் பல பொய்யான தகவல்களை சொல்லி தாக்கல் செய்திருப்பதால் மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.